முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 17.11.2025 அ.வ.எண். 9/2012, வா.சா.1.ரமேஷ், த/பெ. வேலுச்சாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) வழக்குச்சொத்துக்கள் ஆதியில் எனது முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 12.06.1961 ம் தேதியில் பழனிக்கவுண்டரும் அவரது வாரிசுகளும் வழக்கு சொத்துகளையும் அருகில் உள்ள வீடு வகையறா சொத்துக்களையும் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.1961 ம் ஆண்டு பாகத்தில் தாவா ஏ அட்டவணை சொத்து முத்துசாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 1961 பாக பத்திரத்தில் முத்துசாமி கவுண்டருக்கும், எனது தாத்தா கந்தசாமி கவுண்டருக்கும் கூட்டாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தான் தாவா பி அட்டவணை வண்டித்தடம் என்றால் சரிதான்.

2) 1961 பாக பத்திரத்தில் மேற்படி தடத்தில் வேறு யாருக்கும் எவ்வித உரிமையும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி தடத்தை எனது தாத்தா கந்தசாமி கவுண்டரோ அல்லது முத்துசாமி கவுண்டரோ அரசுக்கு தானமாகவோ அல்லது கிரயமாகவோ கொடுத்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. முத்துசாமி கவுண்டரின் வாரிசுகள். எனது தாத்தாவிற்கு பின் தகப்பனார் அல்லது எனது தகப்பனாரின் வாரிசுகள் அரசுக்கு தானமாகவோ அல்லது கிரயமாகவோ கொடுத்தோமா என்றால் இல்லை. 1961 பாக பத்திரத்தின் படி முத்துசாமி கவுண்டருக்கு பின் அவரது வாரிசுகளுக்கு தான் அது பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

3) முத்துசாமி கவுண்டரின் வாரிசுகள் அவர்களுக்கு வந்த பாகத்தில் ஒரு பாக சொத்துக்களை ஒரு கருப்புசாமி என்பவருக்கு ஒரு கிரயமும், 1 ம் வாதிக்கு 1

ஒப்பம்/-(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

கிரயமும் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் ஒரு பாக சொத்துக்களை கொடுக்கவில்லை முழு சொத்துக்களையுமே மேற்படி 2 கிரயங்கள் மூலம் கொடுத்துவிட்டார்கள். 1961 பாக பத்திரத்தில் எனது தாத்தா கந்தசாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை கந்தசாமி இறப்பிற்கு பின்பு எனது தந்தை , நான், 1 ம் பிரதிவாதி பாகம் செய்து கொண்டோம் என்றால் சரிதான்.

4) முத்துசாமி கவுண்டருக்கு பாகம் ஒதுக்கிய போது எப்படி சொத்து இருந்ததோ அதன்படிதான் அவருடைய வாரிசுகள் 1 ம் வாதிக்கு கிரயம் கொடுக்கும்போதும் இருந்தது என்றால் சரிதான். தாவா ஏ அட்டவணை சொத்துக்களை 1 ம் வாதி கிரயம் பெற்ற போது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா ஏ அட்டவணை சொத்தை 1 ம் வாதிக்கு கிரயம் கொடுத்த முத்துசாமி கவுண்டர் வகையறாவுக்கும் எங்களுக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கும் எங்களுக்கும் சுமூகமான உறவு தான் நீடித்து வருகிறது என்றால் இல்லை.

5) 1 ம் வாதிக்கு கிரயம் பெற்ற பத்திரத்தை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி 1 ம் வாதி என்னென்ன கிரயம் பெற்று சொத்துக்களை எப்படி அனுபவித்து வந்தாரோ அதை தான் எனக்கு கிரயம் கொடுக்கும் வரை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அந்த சொத்திற்கு பாத்தியப்பட்ட தடங்களையும் சேர்த்து அனுபவித்து வந்தார். தாவா ஏ செட்யூல் சொத்துக்களை வாதி கிரயம் பெற்ற 2598 சதுர அடி இடத்தில் தென்கோட்டில் கருப்புசாமி கிரயம் பெற்ற சொத்துக்களைஒட்டி 1610 சதுரடியில் வீடு உள்ளது என்றால் சரிதான்.

ஒப்பம்/-(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

6) அந்த வீட்டிற்கு வடபுறம் காலியிடமும், காலியிடத்திற்கு வடபுறம் தாவா பி அட்டவணை வண்டித்தடம் உள்ளது என்றால் வீட்டிற்கு வடபுறம் காலியிடம் இல்லை வண்டித்தடம் தான் உள்ளது. பொதுவாக ஒரு சொத்து வாங்கினால் வண்டித்தடம்குறித்து எழுதுவார்கள் என்றால் வண்டித்தடம் இருந்தால் மாமூல் வண்டித்தடம் என்று எழுதுவார்கள். மெயின் ரோட்டை ஒட்டி வீடு இருந்தால் அந்த வீட்டிற்கு தனியாக தட பாத்தியம் எழுதமாட்டார்கள் என்றால் வாசல் வேறு திசையில் இருந்தால் தடம் கண்டு எழுதுவார்கள். தாவா பி செட்யூல் வண்டித்தடத்தில் எனது தாத்தா கந்தசாமி கவுண்டருக்கு இருந்த 1/2 பங்கு பாத்தியத்தை தான் 07.07.2010 ம் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

7) தாவா சொத்திற்கு எந்த வருடம் நத்தம் சர்வே செய்து புல எண் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. அவ்வாறு நத்தம் சர்வே செய்வதற்கு எனது தகப்பனாருக்கு அறிவிப்பு ஏதேனும் வருவாய்துறையினர் கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நத்தம் சர்வே செய்வதற்கு அளவீடு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா ஏ செட்யூல் சொத்திற்கு நத்தம் சர்வே செய்து கொடுக்கப்பட்ட அளவு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தாவா ஏ செட்யூல் சொத்திற்கு தனி பட்டா கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நத்தம் புல எண்.655/17 ல் வடபுற பாகத்தை தான் 1 ம் வாதி கிரயம் பெற்றார் என்றால் சரிதான்.

8) 1ம் வாதி கிரயம் பெற்றதற்கு பின்னிட்டு தான் தாவா சொத்துகளுக்கு தற்போது உள்ள சர்வே எண் வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை கிரயம் பெற்றதற்கு பின்னிட்டு கட்டிடம்

ஒப்பம்/-(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

ஏதேனும் கட்டினேனா என்றால் இல்லை. 1 ம் வாதி ஏ செட்யூல் சொத்தில் இருந்த கிழக்கு வாசலை அடைத்து வடக்கு வாசலில் நடை வைத்ததை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை என்றால் அவர் வாங்கியதே வடக்கு பார்த்த வாசல் வைத்த வீடு தான்.தாவா ஏ செட்யூல் சொத்திற்கு தென்புறமாக கருப்புசாமி வீடு உள்ளது.
கருப்புசாமி வீட்டிற்கும், ஏ செட்யூல் சொத்திற்கும் இடையே உள்ள சுவற்றை பராமரிக்க இடம் விட்டு வீடுகட்டியுள்ளாரா என்றால் ஒரே சுவர்தான். இடைவெளி எதுவும் இல்லை.

9) தாவா சொத்தினை நீதிமன்ற ஆணையர் 2 முறை பார்வையிட்டு அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் உள்ள விவரங்கள் சரி என்றால் சரிதான். தாவா ஏ செட்யூல் சொத்தின் இருபுறமும் தென்வடலாக 38 1/2 அடி அகலமும், கிழமேலாக 67 1/2 அடி அகலமும் உள்ளது என்றால் ஞாபகமில்லை ஆவணத்தில் உள்ள அளவுகள் சரியானவை ஆகும். அதில் தென்வடலாக 31.9 அடி அகலத்திலும் கிழமேலாக 67.5 அடி நீளத்திலும் தற்போது வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் அளவு ஞாபகமில்லை. தென்வடலாக 38 1/2 அடி அகலத்தில் வீடு 31.9 அடி அகலம் போக வடபுறத்தில் மீதமுள்ள இடத்தின்வழியாகத்தான் தாவா ஏ அட்டவணை சொத்திற்கு போய் வந்து கொண்டிருக்கிறோம் என்றால் சரியல்ல. பி அட்டவணை தடம் வரைக்கும் வீடு உள்ளது.

10) ஏ அட்டவணை சொத்தில் வாதி வீடு கட்டுவதற்கு முன்பு நானும், 1 ம் பிரதிவாதி, எனது தகப்பனார் ஏ அட்டவணை சொத்திற்கு மேபுறம் உள்ள

ஒப்பம்/−(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

வீட்டையும் வடபுறம் உள்ள பி அட்டவணை சொத்துக்களையும் நாங்கள் பாகம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். ஆனால் வாதி வீடு எதுவும் கட்டவில்லை கட்டிய வீட்டை தான் வாங்கினார். 1961 ம் ஆண்டு பாகப்பத்திரத்தில் என்ன நிபந்தனைகள்இருந்ததோ அதை தான் தாவா பி அட்டவணை சொத்துக்களை கந்தசாமி கவுண்டரும், முத்துசாமி கவுண்டரும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அதே நிபந்தனைகளின் படிதான் நாங்களும் மேற்படி நபர்களின் வாரிசுகளும் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். அந்த நிபந்தனைகளின் படி தான் 1ம் பிரதிவாதியும் தாவா பி அட்டவணை சொத்துக்களைஅனுபவித்து வந்தார் என்றால் சரிதான்.

11) 1 ம் பிரதிவாதி மீது இறந்து போன 1 ம் வாதி கொடுத்த புகாரின்அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்பு தாவா சொத்தில் 1 ம் வாதி என்னென்ன மாற்றங்கள் செய்தார் என்றால் அவ்வாறு ஒன்றும் செய்யவில்லை. தாவா பி அட்டவணை சொத்துக்களில் கந்தசாமி கவுண்டரின் சரி பாதி பங்கு 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றால் அது சொத்தே கிடையாது. வண்டித்தடம் ஆகும். போய் வரும் பாத்தியம் மட்டும். முத்துசாமி கவுண்டருக்கு இருந்த சரி பங்கு பாத்தியத்தையும் 1ம் பிரதிவாதி முத்துசாமி கவுண்டர் வாரிசுகளிடமிருந்து பெற்றுவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது.

12) மேற்படி விவரங்களை 1 ம் பிரதிவாதி அவரது எதிர் வழக்குரையில் கூறியுள்ளார் என்றும் அதை குறித்து விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளோமா என்றால் கேட்டுள்ளோம். தாவா பி அட்டவணை சொத்துக்கள் குறித்து துய்ப்பு

ஒப்பம்/–(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

உரிமை கேட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா பிஅட்டவணை சொத்துக்களில் 1ம் வாதி அவருக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்று தெரிந்துதான் தாவா ஏ அட்டவணை சொத்தில் 8 அடி அகலத்தில் கிழகோட்டில் இடம் விட்டு தான் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. கட்டிய வீட்டை தான் வாங்கினார். மெயின் ரோட்டை ஒட்டிய வீட்டிற்கும் எனக்கும் சம்மந்தமில்லாதது குறித்து Easementary rights கேட்டிருப்பது தவறு என்றால் சரியல்ல.

13) 1 ம் வாதி என்னென்ன சொத்துக்களை கிரயம் பெற்றாரோ அதை மட்டும் தான் அவர் எங்களுக்குவிற்பனை செய்ய முடியும் என்றும் அவர் கிரயம் பெறாத எந்த சொத்துக்களையும் உரிமைகளையும் எங்களுக்கு கிரயம் கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. 1 ம் வாதிக்கு தாவா பிஅட்டவணை சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றும் அதனால் தாவா பி அட்டவணை சொத்தில் எந்தஉரிமையும்கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. 1 ம் வாதிக்கு இல்லாத உரிமையை கிரயம் செய்து கொடுத்திருந்தால் சட்டப்படி அது செல்லாது பி அட்டவணை சொத்துக்களை அது கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவாவிற்கு வழக்கு மூலமே கிடையாது என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதிக்கு மட்டுமே சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்ட பி அட்டவணை சொத்துக்களை அபகரிக்க வேண்டி பொய்யான தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். எனவே 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராகவழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி